# இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு – 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சொத்துக்கள் விற்றுத்தீர்க்கப்படாதிருந்த போதிலும் சொத்துக்கள் விற்றுத்தீர்த்தல்களாக ரூபா 1,929,239 தொகையானது மீள்பெறுமதியிடல் ஒதுக்கத்திற்குச் செம்மையாக்கப்பட்டிருந்தது.

(ஆ) செலவினத்திற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் அதற்காக ரூபா 2,470,000 தொகையானது நானாவித ஏற்பாடுகளின் கீழ் செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் மிகை ரூபா 2,470,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | நி.பி. 845(1) இன் 26 ஆவது பின்னிணைப்பு | 2011 ஆம் ஆண்டிற்காக தொலைபேசிப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் மாதம் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 8.3.4 ஆம் பந்தி | உத்தியோகத்தர்களின் மாதாந்த தொலைபேசிப் பட்டியலின் எல்லையினைத் தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அலுவலகத்தின் சகல தெலைபேசிப் பட்டியல்களும் ஒரே பற்றுச்சீட்டில் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2000 சனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 24 ஆம் பிரிவு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 8.7 ஆம் பந்தி | உழைக்கும்போது செலுத்துகின்ற வரி உரிய உத்தியோகத்தரினால் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 456,676 தொகையானது ஆணைக் குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2005 திசெம்பர் 19 ஆந் திகதிய பீஈடி 33 ஆம் இலக்க சுற்றுநிருபம் | திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆணைக் குழுவினால் ரூபா 49,999,955 தொகை அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழு நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 55,517,633 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 20,725,564 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 34,792,069 தொகையான அதிகரிப்பினைக் காணக்கூடியதாக இருந்தது. இந்த அதிகரிப்பு பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | முரண்கள் | | |
|---|---|---|---|
| | **சாதகம்** | **பாதகம்** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| **வருமானம்** | | | |
| மாற்று பதிவுக் கட்டணம் | 7,111,457 | | |
| வருடாந்த ஒழுங்குபடுத்தல் கட்டணம் | 43,136,500 | | |
| அனுமதிப்பத்திர விண்ணப்பக் கட்டணம் | - | 220,000 | |
| ஏனைய வருமானம் | 1,853,893 | - | |
| | 52,101,850 | 220,000 | 51,881,850 |

**செலவினம்**

---------------------

| | | | |
|---|---|---|---|
| ஆளணி வேதனம் | | 8,259,647 | |
| ஓய்வூதிய ஏற்பாடு | | 919,750 | |
| உள்நாட்டு வெளிநாட்டு பிரயாணச் செலவுகள் | | 8,576,253 | |
| நுகர்வுப் பொருட்கள் | 37,831 | | |
| ஒப்பந்த சேவைகள் | 1,434,745 | | |
| ஏனைய சேவைகள் | 954,661 | | |
| மூலதனச் சொத்துக்கள் பராமரிப்பும் பழுது பார்த்தலும் | 4,750 | | |
| நிதிக் கிரயம் | | 4,850 | |
| இனங்காணப்பட்ட நட்டங்கள் | | 291,856 | |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | 1,590,180 | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 21,022 | | |
| முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் | 99,746 | | |
| | ---------------------- | -------------------- | |
| | 2,552,755 | 19,642,536 | 17,089,781 |
| | | | ------------- |
| | | | 34,792,069 |
| | | | ======= |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

ஆணைக்குழுவின் 2011 ஆம் ஆண்டின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 14(2)(1) ஆம் பிரிவின் கீழ் மின்சாரம், நீர், பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பான ஒழுங்குபடுத்தல்களுக்காக நடவடிக்கை எடுப்பதற்காக 2004 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை மீண்டெழும் செலவினமாக ரூபா 245,034,205 தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 45,474,980

தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2009 இன் 23 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மின்சார கைத்தொழில் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் 2009 ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுவதுடன் நீர் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பாக உரிய அதிகாரச்சட்டங்களின் திருத்தம் அங்கீகரிக்கப்பட்டிராமையால் அக் கைத்தொழில்களின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2009 இன் 23 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் பங்கு மூலதனம் 50% இல்லாத மற்றும் மெ.வோ 25 இற்கு மேற்பட்ட இயலளவில் மின் உற்பத்தி செய்யப்படும் கம்பனிகளுக்கு மின்உற்பத்திக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியாது. அதன்பிரகாரம் தற்போதும் மெ.வோ 25 இற்கு மேற்பட்ட இயலளவில் மின் உற்பத்தி செய்யப்படும் 06 கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராத போதிலும் அக் கம்பனிகளினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இலங்கை மின்சார இயலளவிற்குச் சேர்க்கப்பட்டிருந்தது. இந் நிலைமையினைச் சரிசெய்வதற்காக அதிகாரச்சட்டத்தின் 9 ஆவது பிரிவினைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மசகு எண்ணெய் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் கம்பனிகளின் வருடாந்த மொத்த விற்பனைகளில் 0.5% இனைக் கணிப்பீடு செய்யும்போது அந்த பெறுமானம் ரூபா ஒரு மில்லியனுக்கு மேற்படுமாயின் மாத்திரம் அந்த அதிகரித்த பெறுமானம் ஆணைக்குழுவின் மாற்று பதிவுக் கட்டணமாக அறவிடப்பட முடியும். இதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் இறுதிவரையில் மசகு எண்ணெய் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் 14 கம்பனிகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த 14 கம்பனிகளினதும் மொத்த விற்பனைகளின் பிரகாரம் 8 கம்பனிகள் மாத்திரமே ரூபா ஒரு மில்லியனுக்கு மேற்பட்டிருந்தது. இந்த 8 கம்பனிகளில் இருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 25,225,485 தொகை மாற்று பதிவுக்கட்டணமாகக் கிடைத்திருந்தது.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்ட 10 விடயங்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 1,324,436 தொகையான கிரயங்களும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்ட 7 விடயங்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 83,344 கிரயமான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என்பன முறையாக தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மசகு எண்ணெய் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் விற்பனை பெறுமதிகளின் அடிப்படையில் மாற்று பதிவுக் கட்டணங்கள் செலுத்த வேண்டுமா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இரண்டு நிறுவனங்களிடமிருந்து விபரங்களைப் பெறுவதற்கோ அல்லது கட்டணங்களை அறவீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆணைக்குழுவினால் 2011 ஆம் ஆண்டின்போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட தண்டப் பணம் ரூபா 5,991 தொகையும் ஊழியர் இழப்பீடு ரூபா 284,000 தொகையும், ஏனைய நட்டங்கள் ரூபா 1,699 தொகைகளுமாக ரூபா 291,690 கூட்டுத்தொகையான சிக்கனமற்ற செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4. கணக்களி தன்மையும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீடு

பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 21% முதல் 175% வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான ஒரு முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்களைக் கணக்கீடு செய்தல்

(ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

(இ) முதலீடு